**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடாத்தும்**

**விவாதச் சுற்றுப்போட்டி – 2018**

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இளையவர்களின் விவாதத் திறனை வளர்க்கும் நோக்கில் விவாதச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது. போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது
2. திறந்த போட்டி – 35 வயதுக்குட்பட்டவர்களுக்கானது

---

## போட்டி தொடர்பான விதிமுறைகள்

### பாடசாலை மாணவர்களுக்கான போட்டி விதிமுறைகள்

- ஒரு அணியில் ஐவர் இடம்பெற வேண்டும்
- போட்டியில் மூவர் பங்குபற்றுவர். இருவர் காத்திருப்பு பட்டியலில் இருப்பர்.
- தெரிவுப் போட்டிகளுக்கான தலைப்புக்கள் முன்னரே வழங்கப்படும். ஆனால் போட்டித் தினத்தன்று வழங்கப்பட்ட தலைப்புக்களில் ஒன்று நடுவர்களால் முடிவுசெய்யப்பட்டு வழங்கப்படும்.
- அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றுக்கான தலைப்புக்கள் உடன் வழங்கப்பட்டு தயார்ப்படுத்தலுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும்.
- விவாதிகளுக்கான நேர அளவு பின்வருமாறு அமையும்

| பேச்சாளர் | வகிபாகம் | நேரம் |
|---|---|---|
| 01 | தலைவர் - தொடக்கவுரை | 5 நிமிடம் |
| 02 | இணை விவாதி | 4 நிமிடம் |
| 03 | நிறைவு விவாதி | 4 நிமிடம் |
| 01 | தலைவர் - தொகுப்புரை | 3 நிமிடம் |

- போட்டிக்கான விண்ணப்பங்கள் உரிய வகையில் நிறைவு செய்யப்பட்டு அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 30.04.2018 க்கு முன்னதாக அஞ்சல் மூலமாக **தலைவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இல 28 குமாரசாமி வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பங்களை தமிழ்ச் சங்க இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம். (www.thamilsangam.org)
- தெரிவுப் போட்டிகளுக்கு முன்னதாக விவாதிகளை திசைமுகப்படுத்துவதற்காக பயிற்சிப்பட்டறையொன்று நடாத்தப்படும். இப் பட்டறையில் விவாதிகள் கலந்து கொள்ளவேண்டியது அவசிய நிபந்தனையல்ல.
- தெரிவுப் போட்டிகளின் முதல் சுற்று போட்டிகள் சுழற்சி முறை அடிப்படையிலும் ஏனைய போட்டிகள் விலகல் முறையிலும் நடைபெறும்.
- புள்ளியிடும் திட்டம் பின்வருமாறு அமையும்

| விடய இல | விடயம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | கருத்துச் செறிவு | 30 |
| 02 | சமயோசித விவாதத்திறன் | 30 |
| 03 | உச்சரிப்பு தொனி குரல்வன்மை நிலை | 20 |

| | | |
|---|---|---|
| 04 | பிறமொழிக்கலப்பின்மை | 10 |
| 05 | குழு ஒருமைப்பாடு | 05 |
| 06 | நேரக் கட்டுப்பாடு | 05 |
| **மொத்தம்** | | 100 |

- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டியாளர்கள் பண்பாட்டு உடையுடன் கலந்து கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.
- போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணி மாணவர்களுக்கு பெறுமதியான புத்தகப் பரிசுகளும் சான்றிதழ் மற்றும் பதக்கங்களுடன் பாடசாலை நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்களும் வழங்கப்படும்.
- இறுதிப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களிடையே சிறந்த விவாதி என ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு தமிழ்ச் சங்கத்தின் இலச்சனை பொறிக்கப்பட்ட விருது வழங்கப்படும்.
- போட்டியிலும் பயிற்சிப் பட்டறையிலும் கலந்து கொள்ளும் அனைத்து போட்டியாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

**தெரிவுப் போட்டிக்கான தலைப்புக்கள்**

1. இன்றைய கல்வி முறை தாய்மொழிக்கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது - இல்லை
2. அறிவியல் வளர்ச்சி தமிழ்மொழியின் நிலைத்திருப்புக்குச் சாதகமானது – பாதகமானது
3. தமிழ்ப் பண்பாட்டின் மீதான தமிழர்களின் பற்றுறுதி வளர்கின்றது – தளர்கின்றது
4. தமிழ் இலக்கியங்கள் பெண்களை மேன்மைப்படுத்தியுள்ளன – சிறுமைப்படுத்தியுள்ளன
5. காலத்துக்கேற்ப தமிழ் மொழி தன்னை தகவமைத்துக்கொள்கின்றது - இல்லை
6. பாரதி பாடல்களில் விஞ்சி நிற்பது மொழிப் பற்றே - தேசப் பற்றே
7. தம்பியருள் தனித்துவமானவன் இலக்குவனே – கும்பகர்ணனே
8. வள்ளுவம் சொல்லும் வாழ்வியலை இன்றைய தமிழ்ச் சமூகம் பின்பற்றுகின்றது - இல்லை
9. ஈழத்து தமிழ் இலக்கிய புலமைத்துவம் வளர்கின்றது – தளர்கின்றது
10. மெல்லத்தமிழ் இனி வாழும் - வீழும்

**போட்டி பற்றிய மேலதிக தொடர்புகளுக்கு**

திரு.ச.லலீசன் தலைவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 0773787358

திரு.இ.சர்வேஸ்வரா பொதுச்செயலாளர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 0778449739

பேராசிரியர் தி.வேல்நம்பி பொருளாளர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 0777448352

| | |
|---|---|
| இல 28 குமாரசாமி வீதி | **பொதுச் செயலாளர்** |
| கந்தர்மடம் | யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் |
| யாழ்ப்பாணம் | 27.03.2018 |

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடாத்தும்

# விவாதச் சுற்றுப்போட்டி – 2018

# மாதிரி விண்ணப்ப படிவம்

1. பாடசாலையின் பெயர் : ……………………………………………………………
2. பாடசாலையின் தபால் முகவரி : ……………………………………………….

   ……………………………………………….

   ……………………………………………….
3. பாடசாலையின் தொலைபேசி இல : ………………………………………………...
4. பொறுப்பாசிரியர் பெயர் : ………………………………………………...
5. பொறுப்பாசிரியரின் கைத்தொலைபேசி இல: ………………………………………….
6. போட்டியாளர் விபரம்

| இல | முழுப்பெயர் | தரம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |

மேற்குறித்த விபரங்கள் யாவும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

………………                                        ………………………

திகதி                                        அதிபர் ஒப்பம்